www.agaram.lk

බස්නාහිර පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
மேல் மாகாண கல்வி திணைக்களம்
Western Provincial Education Department

දෙවන වාර ඇගයීම - 2018
இரண்டாம் தவணை மதிப்பீடு - 2018
Second Term Evaluation - 2018

10 ශ්‍රේණිය
தரம் 10
Grade 10

පුරවැසි අධ්‍යාපනය I
குடியயற் கல்வி - I
Civics - I

පැය එකයි
ஒரு மணி நேரம்
One Hours

எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக. இல 1-40 வரையான வினாக்களுக்கு மிகவும் பொருத்தமான விடையை தெரிவு செய்து கோடிடுக.

1. தீர்மானம் எடுக்கும் செயற்பாட்டில் மக்கள் அனைவரும் பங்கு கொள்ள சந்தர்ப்பம் வழங்கப்படும் ஆட்சி முறையை குறிப்பது,
   1. மறைமுக சனநாயகம் 2. நேரடி சனநாயகம்
   3. பிரதிநிதித்துவ சனநாயகம் 4. குழு முறை சனநாயகம்

2. சனநாயகத்தின் ஆரம்பம் என கருதத்தக்க ஆட்சி இடம் பெற்ற நகரம்..
   1. புது டில்லி 2. பர்ளின் நகரம் 3. எதேன்ஸ் நகரம் 4. நியூயோர்க் நகரம்

3. “அரசின் அல்லது மக்களின் விருப்பங்களைக் கொள்கைகளாக மாற்றுவதன் மூலம் அவற்றை நடைமுறைக்குக் கொண்டு வரும் பிரதிநிதி அரசாங்கமாகும்” எனக் கூறியவர்
   1. எட்காகேசி 2. சீலர் 3. ஆப்ரகாம் லிங்கன் 4. பேராசிரியர் காணர்

4. சட்டத்துறையின் மூலம் உருவாக்கப்படும் சட்டங்களை நடைமுறைப்படுத்தும் நிறுவனம்,
   1. நிறைவேற்றுத் துறை 2. நீதித்துறை
   3. சட்டத்துறை 4. குடிமக்கள்

5. பாராளுமன்ற ஆட்சி முறையில் நிறைவேற்றுத் துறை தெரிவு செய்யப்படுவது,
   1. நிறைவேற்றுத் துறை யிலிருந்து 2. பாராளுமன்றத்திலிருந்து
   3. மக்களிலிருந்து 4. நீதித்துறையிலிருந்து

6. சனநாயக நாடுகளில் ஆட்சி செயன்முறைகளின் போது மக்களின் கருத்துக்களை நேரடியாக அறியும் சந்தர்ப்பத்தை குறிப்பது,
   1. பாராளுமன்ற தேர்தல் என 2. சனாதிபதி தேர்தல் என
   3. மக்கள் தீர்ப்பு என 4. பாராளுமன்ற ஆட்சி முறை என

7. பின்வரும் கூற்றுக்களில் ஆப்ரகாம் லிங்னின் கூற்றைத் தெரவு செய்க.
   1. மக்கள் மக்களுக்காக மக்கள் பிரதிநிதி ஒருவரை நியமிப்பதே சிறந்தது.
   2. மக்களால் மக்களுக்காக நடாத்தப்படுகின்ற மக்களுடைய ஆட்சிமுறை சனநாயக ஆட்சி முறையாகும்.
   3. சனநாயக ஆட்சிமுறை சகலருக்கும் உரிமைகள் வழங்கும் ஒரு ஆட்சி முறையாகும்.
   4. மனிதனின் கடமை மனிதனுக்கு சேவை செய்வது.

8. ஒழுங்கமைக்கப்பட்ட கொள்கைகளின் அடிப்படையில் ஆட்சி அதிகாரத்தை பெற்றுக் கொள்ளும் நோக்கில் ஒன்றிணைந்த மக்கள் குழுவை நாம் அடையாளப்படுத்துவது,
   1. அரசியல் கட்சி என்பதாகும் 2. எதிர்க்கட்சி என்பதாகும்
   3. அரசாங்கம் என்பதாகும் 4. அரசு என்பதாகும்

9. வடகொரியா என்ற நாடு
   1. சமதர்ம அரசியல் கோட்பாட்டை கொண்டது. 2. முதலாளித்துவ நாடாகும்.
   3. சனநாயகமுறை நாடாகும். 4. சர்வாதிகார நாடாகும்

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

10. இருகட்சி முறை நடைமுறையில் உள்ள நாடு,
    1. கியூபா   2. இந்தியா   3. பெரிய பிரித்தானியா   4. இலங்கை

11. இலங்கையில் அதிக எண்ணிக்கையான மாநகர சபைகளைக் கொண்ட மாவட்டம்.
    1. மொனராகலை   2. கொழும்பு   3. வவுனியா   4. கம்பஹா

12. குறைந்தளவு பிரதேச சபைகளைக் கொண்ட மாவட்டம் கிளிநொச்சி ஆகும். அப்பிரதேச சபைகளின் எண்ணிக்கை
    1. 04   2. 03   3. 02   4. 01

13. உள்ளூராட்சி நிறுவனங்களில் அதிகமாக நகர சபைகளைக் கொண்ட இரு நகரங்கள்
    1. கொழும்பு – கண்டி   2. கொழும்பு – களுத்துறை
    3. கொழும்பு – கம்பஹா   4. களுத்துறை – கம்பஹா

14. ஒற்றையாட்சி நிலவும் நாடுகளுள் அடங்காத நாடு,
    1. சுவிட்சர்லாந்து   2. ஐக்கிய இரச்சியம்
    3. இலங்கை   4. பிரான்ஸ்

15. இன, மத, பால் வேறுபாடுகளின்றி இலங்கை வாழ் சகலருக்கும் வாக்குரிமை வழங்கப்பட்ட அரசியல்யாப்பு,
    1. குறூ மக்கலம் அரசியல் சீர்திருத்தம்   2. டொனமூர் அரசியல் சீர்த்திருத்தம்
    3. சோல்பரி அரசியல் சீர்த்திருத்தம்   4. 1948 அரசியல் யாப்பு மூலம்

16. தேர்தலின் போது ஒரு தேர்தல் தொகுதியில் போட்டியிடும் வேட்பாளர்களில் அதிக வாக்குகளைப் பெற்ற நபரே வெற்றியாளர் என குறிக்கும் முறை
    1. பாராளுமன்ற தேர்தல் முறை   2. சமதர்ம பிரதிநிதித்துவ முறை
    3. மக்கள் பிரதிநிதித்துவ முறை   4. சாதாரண பெரும்பான்மை பிரதிநிதித்துவ முறை

17. ஒற்றையாட்சி தொடர்பான பின்வரும் கூற்றுக்களில் மிகச்சரியான கூற்று
    1. நீதித்துறை அதிகாரங்கள் பிரதேச அலகுகளுக்கு வழங்கள்
    2. பிராந்திய அரசு, நீதி என நீதி நடவடிக்கை பிரிந்து செயற்படல்
    3. ஆட்சி அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டிருத்தல்
    4. அரசியல் அதிகாரம் ஒரு மத்திய அதிகார பீடத்திடம் மையப்பட்டிருத்தல்.

18. 1863ல் அடிமைகளாக சேவையில் அமர்த்தப்பட்டிருந்த மக்களை விடுவித்து அவர்களுக்கான சமூக பாதுகாப்பு, உரிமை, உறுதிப்படுத்திய அமெரிக்கத் தலைவர்,
    1. வில்லியம் ஷேக்ஸ்பியர்   2. ஆப்ரகாம் விலியம்
    3. ஆப்ரகாம் லிங்க்ன்   4. தோமஸ் அல்வா

19. **A**– தேசிய ரீதியில் நீதி மற்றும் சமாதானத்தை பாதுகாத்தல்

    **B**– அரசாங்க வழக்குகளின் போது சட்ட ஆலோசனை வழங்குதல்

    **C**–தேசிய விஷேட நிகழ்வுகளின் போது அரசாங்கத்திற்கு உதவுதல்

    **D**– அரசியல் யாப்பு சம்மந்தமான விளக்கம் கூறல்.

    மேற்கூறப்பட்ட விடயங்களுள் சமூக பாதுகாப்பை உறுதிப்படுத்த பாதுகாப்புப் படையினரால் நிறைவேற்றப்படும் செயற்பாடுகளாவன,

    1. **C** யும் **D** யும்   2. **A** யும் **D** யும்

    **3. A** யும் **C** யும்   4. **C** யும் **B** யும்

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

20. இலங்கை கடற்படை ஆரம்பிக்கப்பட்டது,
    1. 1950.12.09 2. 1949.10.10 3. 1973.03.24 4. 1949.01.10

21. நீதிபதி திணைக்களத்தின் பிரதான செயற்பாடு ஒன்று,
    1. பொது மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தல்
    2. அரசாங்கம் சார்பாக வழக்குத் தொடரல் மற்றும் வழக்குகளுக்கு ஆஜராகுதல்
    3. நீதித்துறைக்குறிய சகல பொறுப்புக்களையும் செயற்படுத்தல்.
    4. நீதி, நேர்மை கொண்ட ஒரு சமூகத்தை உருவாக்கும் பொருட்டு செயற்படுத்தல்.

22. இலங்கையில் மனித உரிமைகள் ஆணைக்குழுவால் ஏற்படுத்தப்பட்டுள்ள கட்டளைச் சட்டம் பின்வருவனவற்றில்எது?
    1. 1996 ஆம் ஆண்டின் 21ம் இலக்க கட்டளைச் சட்டம்
    2. 1998 ஆம் ஆண்டின் 50ம் இலக்க கட்டளைச் சட்டம்
    3. 1996 ஆம் ஆண்டின் 12ம் இலக்க கட்டளைச் சட்டம்
    4. 1998 ஆம் ஆண்டின் 15ம் இலக்க கட்டளைச் சட்டம்

23. புதிய தொழில்நுட்ப உபகரணங்களின் பயன்பாட்டினால் மனிதனுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பானது,
    1. சூழல் மாசடைதல் வேகமடைந்தமை.
    2. வளங்களின் வீண்விரயம் குறைவடைதல்.
    3. சமூகத் தொடர்புகள் வலுவடைதல்.
    4. சிறந்த ஆளிடைத் தொடர்புகள்.

24. **A**- வளங்களின் வினைத்திறனை மேம்படுத்தல்

    **B**- புதிய தொழிநுட்பத்தை அதிகம் பயன்படுத்தல்

    **C**– புதிய கண்டு பிடிப்புகள் மீது கவனம் செலுத்தல்

    **D** - சூழல் பாதுகாப்பினை மேற்கொள்ள முடியுமாதல்.

    மேற்கொள்ளப்பட்ட கூற்றுக்களிலிருந்து நிலையான அபிவிருத்தியின் மூலம் கிடைக்கக்கூடியவை

    **1. A** யும் **B** யும்

    **2. C** யும் **A** யும்

    **3. D** யும் **B** யும்

    **4. A** யும் **D** யும்

25. பின்வரும் புதிய உபகரணங்களுள் சுகாதார துறையின் சேவைகளை இலகுபடுத்திய உபகரணம் எது
    1. **E**– மின் வங்கிச் சாதனம் (**E–Banking**)
    2. **ATM** இயந்திரம் (**ATMMachine**)
    3. **E**– கற்றல் இயந்திரம் (**E–Learning**)
    4. **C.T.** ஸ்கேனர் இயந்திரம் (**C.T. Scanner**)

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

26. **A**– தகவல்கள் நுழைவு ஆப்ரேட்டர் (**Data Entry Operator**)

**B**– மென் பொருள் பொறியியலாளர்

**C**– கிராபிக் டிசைனர் (**Graphic Designer**)

**D** - ஆலோசகர்

மேற்குறிப்பிட்ட தொழில்களில் புதிய தொழிநுட்பமின்றி ஈடுபடக் கூடிய தொழிலாக அமைவது,

**1. A** 2. **B** 3. **C** 4. **D**

**2.**

27. **A**– ஆட்சி அதிகாரம்

**B**–அரசியல் யாப்பு ரீதியான

**C**–அடிப்படை உரிமைகள்

**D**– வாக்குரிமை

மேற்கூறியவற்றுள் உள்ளடங்காத விடயம்

**1. C** 2. **B** 3. **A** 4. **D**

28. பாராளுமன்ற சட்டம் ஒன்றின் மூலம் செயற்படுத்துகின்ற நிறுவனம்
1. பெற்றோலிய கூட்டுத்தாபனம் 2. கல்வி அமைப்பு
3. கமத்தொழில் திணைக்களம் 4. இலங்கை மதுவரித் திணைக்களம்

29. கிழக்கு மாகாணத்துக்குரிய மாவட்டம்
1. மட்டக்களப்பு 2. மன்னார் 3. வவுனியா 4. முல்லைத்தீவு

30. இலங்கையில் அதிக எண்ணிக்கையான பிரதேச சபைகளை கொண்ட மாகாணம் மற்றும் மாவட்டம்
1. தென் மாகாணம் - மாத்தறை மாவட்டம்
2. வட மத்திய மாகாணம் - அநுராத புரம்
3. வடமேல் மாகாணம் - குருநாகல் மாவட்டம்
4. வட மேல் மாகாணம் புத்தளம்

31. ஐக்கிய அமெரிக்காவின் மத்திய அரசுக்குறிய அதிகாரம் ஒன்று
1. தேசிய கல்வி
2. தேசிய பொருளாதார அபிவிருத்தி
3. வீடமைப்பு
4. உள்ளூராட்சி மன்றம் மற்றும் பெருந்தெருக்கள் அமைத்தல்

32. மாநில அரசுகள் "கென்ரன்" என்றழைக்கப்படும் நாடு
1. பிரான்ஸ் 2. ஐக்கிய இராஜ்ஜியம் 3. ஐக்கிய அமெரிக்கா 4. சுவிட்சர்லாந்து

33. உங்களது நண்பியின் எதிர்கால இலட்சியம் கணக்காளர் பதவி வகிப்பதாகும். அதற்கமைய அவர் தெரிவு செய்ய வேண்டிய கற்கை நெறி எதுவென கூறுவீர்
1. கலைப்பிரிவு கற்கை நெறி 2. வர்த்தகப்பிரிவு கற்கை நெறி
3. விஞ்ஞானம் பிரிவு கற்கை நெறி 4. கணிதப்பிரிவு கற்கை நெறி

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

34. வைத்தியர், பொறியியலாளர், ஆசிரியர் மற்றும் திட்டமிடல் அதிகாரி ஆகிய தொழில்களில் எக்கற்கை நெறியை கற்றாலும் உள்வாங்கப்படக் கூடிய தொழிலானது,
1. வைத்தியர் 2. ஆசிரியரி 3. பொறியியலாளர் 4. திட்டமிடல் அதிகாரி

35. எதிர்காலத்தில் முதலீடு செய்ய விரும்பும் ஒரு நபர் செய்யக்கூடிய மிகப் பொருத்தமான செயற்பாடு,
1. நன்கொடை பெற்றுக் கொள்வது 2. கடனட்டைகளை பயன்படுத்தல்
3. நிலையான வைப்புக்களில் பணம் சேமித்தல் 4. வட்டிக்கு பணம் கொடுத்தல்

36. ஒரு அரசுக்குறிய மூலக்கூறுகளாவன,
1. நிலப்பரப்பு, மக்கள் தொகை, நீதித்துறை, இறைமை.
2. அரசாங்கம், நீதித்துறை, நிறைவேற்றுத் துறை, யாப்பு
3. நிலப்பரப்பு, மக்கள் தொகை, அரசாங்கம், இறைமை.
4. மக்கள் தொகை, நீதித்துறை, இறைமை, அரசாங்கம்

37. இலங்கையில் சனாதிபதி அரசாங்க முறை ஆரம்பமான வருடம்.
1. 1972 2. 1978 3. 1948 4. 1977

38. சனாதிபதியால் கையெழுத்திடும் ஆணைப்பத்திரமொன்றின் மூலம் நியமிக்கப்படும் மாகாண சபை பதவி எது?
1. பிரதமர் பதவி 2. அமைச்சர் பதவீ 3. முதலமைச்சர் பதவி 4. ஆளுனர் பதவி

39.

| (அ) | (ஆ) |
|---|---|
| 1. அரசாங்கம் | **A**. நியாயத்தை நிலை நிறுத்தல் |
| 2. சட்டத்துறை | **B**. சட்டங்களை நடைமுறைபடுத்தல் |
| 3. நிறைவேற்றுத்துறை | **C**. சட்டம் மற்றும் சமாதானம் பாதுகாத்தல் |
| 4. நீதித்துறை | **D**. சட்டம் உருவாக்குதல் |

மேற்கூறப்பட்ட "அ" பகுதிக்குறிய மிகப் பொருத்தமான மிகப்பொருத்தமான "ஆ" பகுதியை இணைக்கும் போது கிடைப்பது
1. **CDBA** 2. **CBAC** 3. **CABD** 4. **CBDA**

40. 2012 குடிசன தொகை மதிப்பீடு தரங்களின் படி இலங்கை வாழ் இந்து சமயத்தவர்களின் சதவீதமாகக் காணப்படுவது,
1. 9.7 2. 12.6 3. 12.9 4. 9.8

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk

බස්නාහිර පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
மேல் மாகாண கல்வித் திணைக்களம்
Western Provincial Education Department

දෙවන වාර ඇගයීම - 2018
இரண்டாம் தவணை மதிப்பீடு - 2018
Second Term Evaluation - 2018

| | | |
|---|---|---|
| 10 ශ්‍රේණිය<br>தரம் 10<br>Grade 10 | පුරවැසි අධ්‍යාපනය II<br>குடியயற் கல்வி - II<br>Civics - II | පැය දෙකයි<br>இரண்டு மணி நேரம்<br>Two Hours |

* முதலாம் வினா கட்டாயமானது.
* முதலாம் வினா உட்பட ஏனைய நான்கு வினாக்களுக்கு விடையளிக்குக.
* மொத்தம் 5 வினாக்களுக்கு விடையளிக்குக.

01. 1. தேர்தல் ஒன்றின் போது மக்கள் பிரதிநிதிகளை தெரிவு செய்வதற்காகப் பின்பற்றப்படும் தேர்தல் முறைகள் 2 ஐ எழுதுக.

2. இலங்கையின் நடைபெறும் தேர்தல்கள் 2 ஐக் குறிப்பிடுக.

3. குறித்த நபரொருவர் கடனட்டை (**Credit Card**) பயன்படுத்துவதனால் அடையும் பிரதிகூலங்கள் 2 குறிப்பிடுக

4. சனநாயக ஆட்சிமுறையில் இரு பிரதான பிரிவுகளும் எவை?

5. 1978 அரசியல் யாப்பின் 13 ஆம் சீர்திருத்தின் படி மூன்று நிரல்களின் பிரகாரம் அதிகாரங்கள் வகுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் இரண்டைக் குறிப்பிடுக

6. ‘‘எதேன்ஸ்’’ நகர அரசியல் பிரதான ஆட்சி நிறுவனமாக விளங்கிய மக்கள் மன்றத்தின் செயற்பாடுகளின் பங்குபற்ற அனுமதிக்கப்படாத நபர்களில் இரு பிரிவினரை குறிப்பிடுக.

7. இலங்கை அரசியல் யாப்பிற்கமைய எல்லை நிர்ணய ஆணைக்குழு மூலமாகத் தேர்தல் தொகுதிகள் பிரிக்கும் போது பயன்படுத்தும் அளவீட்டு நியதிகள் இரண்டை குறிப்பிடுக.

8. அரசியல் கட்சி முறைகளுள் இரண்டினைப் பெயரிடுக.

9. சட்ட சபையின் (பாராளுமன்றம்) செயற்பாடுகள் 2ஐக் குறிப்படுக.

10. ஐக்கிய அமெரிக்காவின் சட்டத்துறையான காங்கிரசில் செயற்படும் இரு சபைகளும் எவை?

(2**x**10 = 20)

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

02. 1. சுவிட்சர்லாந்தில் அரச கரும மொழிகளாகக் கருதப்படும் இரு மொழிகளைக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

2. இந்நாட்டின் மத்திய அரசின் அதிகாரங்கள் மூன்றை எழுதுக. (3 புள்ளிகள்)

**3.** சுவிட்சர்லாந்து சமஷ்டி முறையின் சிறப்பியல்புகள் 03 ஐக் குறிப்பிட்டு அவற்றுள்ஒன்றை விளக்குக. (5 புள்ளிகள்)

03. 1. ஐக்கிய அமெரிக்க சனாதிபதியால் சில அதிகாரங்கள் நடைமுறைப்படுத்தப்படும் போது செனட் சபையின் அனுமதியை பெறல் வேண்டும். அவ்வாறான இரு சந்தர்ப்பங்களைகுறிப்பிடுக.

(2 புள்ளிகள்)

2. நிகழ்காலத்தில் ஐக்கிய அமெரிக்க மா நில அரசுகளை விஞ்சும் வண்ணம் மத்திய அரசாங்கம் பலம் பெற்றுள்ளது. இதற்கான காரணங்கள் 03 ஐக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

3. ஐக்கிய அமெரிக்கவின் மத்திய அரசுக்குறிய பிரதான அதிகாரங்கள் 3ஐக்குறிப்பிட்டு அவற்றுள் விளக்குக. (5 புள்ளிகள்)

04. 1. பன்மை பண்பாட்டுச் சமூகத்தின் அடிப்படைப் பண்புகள் 2ஐக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

2. இலங்கையில் பன்மை பண்பாட்டுச் சமுகம் உருவாவதில் செல்வாக்கு செலுத்திய காரணிகள் 3ஐக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

3. பன்மைக் கலாசார நாடான இலங்கைக்கு நல்லாட்சியின் தேவைப்பட்டதுற்கு ஏதுான காரணிகள் 03 தருக. (5 புள்ளிகள்)

05. 1. மாகாண ஆளுனர் ஒருவர் தனது பதவிக்காலம் முடிவடைய முன் பதவி நீக்கம் செய்யப்பட்டும் இரு முறைகளைக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

2. முதலமைச்சர் மற்றும் அமைச்சரவையின் அதிகாரங்களும் பணிகளும் மூன்று கூறுக. (3 புள்ளிகள்)

3. இலங்கையில் செயற்படும் உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் அவற்றின் பிரதானிகளின் பதவி நாமங்கள் 3ஐக் குறிப்பிட்டு அவர்களுள் ஒருவரின் அதிகாரங்களும் பணிகளையும் விளக்குக. (5 புள்ளிகள்)

06. 1. அதிகாரம் பகிரப்பட்டுள்ள விதத்திற்கேற்ப அரசின் பிரதான வகைகள் 2ஐக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

2. தேசிய அரசுகளின் பிரதான பண்புகள் 3 ஐக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

3. அரசாங்கத்தின் பிரதான கூறுகள் 3 ஐக் குறிப்பிட்டு அவற்றுள் ஒரு துறையின் செயற்பாடு மற்றைய துறையை எவ்வாறு செல்வாக்கு செலுத்துகிறது என்பதை விளக்குக. (5 புள்ளிகள்)

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

07. 1. சனநாயக ஆட்சி முறையின் பண்புகள் 2 ஐ எழுதுக. (2 புள்ளிகள்)

2. குறித்த ஒரு நபர் ஆரசியல் உரிமைகளைப் பெற்றுக் கொள்வதற்கு அவரிடம் காணப்பட வேண்டிய அடிப்படைத் தகைமைகள் 3 ஐக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

3. அரசியல் உரிமைகளை பயன்படுத்தக் கூடிய சந்தர்ப்பங்கள் 3 ஐக் குறிப்பிட்டு, அவற்றுள் ஒன்றைப்பற்றிய உமது கருத்து எழுதுக. (5 புள்ளிகள்)

Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!